உ
சிவமயம்

# ஆற்றங்கரை வேலவனின் நிர்வாக சபைத்தலைவரும், 2018ம் ஆண்டு மகோற்சவ பிரதமகுருவுமான சிவஸ்ரீ ஆ. சிவசண்முக ஐயர் J.P அவர்களின் ஆசியுரையும் வாழ்த்துச் செய்தியும்



ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலன் பக்தர்களின் பிணி தீர்க்கும் வேலனாக, அன்னதானக் கந்தனாக, கல்லோடைக் கந்தனாக, காவடிக் கந்தனாக, கந்தசஷ்டிக் கவசனாக, தமிழ் முருகனாக, பூவரசு மரத்தடியில் இருந்து அருள்புரியும் கருணைக் கடலாம் முருகனின் அற்புதங்களை அடியவர்கள் வாசித்து மகிழ்ச்சியடைய இவ் அற்புதங்களும் அனுக்கிரகங்களும் மலர் வெளியிடுவதற்கு ஆசீர்வதித்து வாழ்த்துக்களை வழங்குவதை இறைவனின் பெருங்கருணையாக நினைக்கின்றேன்.

சந்நிதி வேல்ப்பெருமானின் புதுமைகளையும் அற்புதங்களையும் வாசிப்போர் உள்ளத்தில் தெளிவும் மிக்க மகிழ்ச்சியும் ஏற்படும். இப்பணி தொடர்வதற்கும் சிறப்பாக நடைபெறுவதற்கும் என்றும் சந்நிதி வேலவனின் திருப்பாதங்களை பணிந்து வணங்குகின்றேன்.

என்றும் சந்நிதிப் பெருமானை மனதில் இருத்தி வணங்கி அவன் அருளைப் பெற்று ஏகுங்கள்.

எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான்

**திரு. ஆ. சிவசண்முக ஐயர்.**
**பரிபாலன சபைத்தலைவர்,**

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இலங்கைத் திருநாட்டில் அமைந்த சைவத்திருத் தலங்களில் வரலாற்றுச் சிறப்பும் திருவருட் தன்மையும் கோடான கோடி பக்தர்களின் பக்திக்குரிய ஆலயமாகவும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் சரித்திர தொடர்புடைய தொண்டைமானாறு எனும் வளம்மிக்க கிராமத்தில் அமைந்துள்ளது. உலகில் எவ்விடத்திலும் காணப்படாத தனித்துவமும் தெய்வத்திருவருள் தன்மையும் புதுமை பொலிவும் கொண்டுள்ள இவ்வாலயத்தில் முருகப்பெருமானது திருவருளானது மிகுந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. கந்தப் பெருமானின் கருணை வெள்ளம் மடைதிறந்து பாய்கின்றது. அவரை நாடிவரும் அடியார்கள் மட்டுமன்றி ஆங்காங்கே இருந்து பக்தி வழிபாடு செய்வோரும் கருணைக் கடலில் மூழ்கி திருவருட் பிரசாதங்களை தினமும் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அபரிதமார்க்கத்தை முருகன் அடியார் பக்த சிரோன்மணி செல்வச்சந்நிதி சந்நிதி மேவிய பூரணனே எனக் கசிந்து பாடியுள்ளார்.

இவ்வாயலம் தெய்வீக கந்த புராணத்துடன் தொடர்புடையதாதலால் இதன் பழமை அளவிடற்கரிதான தொன்மையைக் கொண்டுள்ளது புலனாகின்றது. திருச்செந்தூர் பதியிலிருந்து கந்தப்பெருமான் வீரவாகுத்தேவரை மகேந்திராபுரிக்கு சூரினிடத்து தூதனுப்பியதாகக் குறிப்பிட்டு தூதுவரான வீரவாகுத்தேவர் வட இலங்கையின் வல்லி நதிக்கரையில் (தற்போது ஆலயத்தின் மேற்குப்புறத்தே) உள்ள கல்லோடையில் (ஆலயத்தின் வடபுறத்தே) காலடி பதித்து சூரனிடம் சென்றார். காலடி பதித்த பாதச்சுவடுகள் இன்றும் ஆலய உரிமையாளர்களால் பாதுகாக்கப்படுகின்றது. ஏராளமான பக்தர்கள் பார்வையிட்டு வணங்கிச் செல்கின்றனர். சூரனிடத்துச் சென்று திரும்பி வீரவாகுதேவர் சந்திக்கால மேற்பட்ட

தன்மையினால் சந்திக்காலப் பூசைக்கடனை வல்லி நதிக்கரையில் செய்தார். இச்சந்திக்காலக் கடன் செய்த இடம் இன்று சந்நிதியாக மருவி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாக மிளிர்கின்றது. இவ்விடத்தில் கந்தப்பெருமானை வழிபாடு செய்த தேவலோக கந்தர்வரின் வரலாறு பக்தி பூர்வமானது.

தேவலோகத்தில் வியாழ பகவானது கட்டளைக்கு ஒழுகத் தவறிய கந்தர்வரான ஜராவசு பகவானின் சாபத்திற்கு ஆளாகி பூமியில் பிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கந்தர்வரான ஜராவசு பகவானிடம் தனக்கு சாபவிமோசனம் தருமாறு வேண்டுதல் செய்தபோது பகவான் சாபத்தை மாற்றமுடியாது என்றும் கதிர்காம காட்டுப் பகுதியில் யானையாக அவதரிக்கும் போது கதிர்காமக்கந்தனைத் தரிசிக்க வரும் சிகண்டி முனிவரால் விமோசனம் அளிக்கப்படுமென்று பணித்தருளினார். சாபம் பெற்ற ஜராவசு அக்காட்டடில் யானையாக அவதரித்து பல அட்டகாசங்கள் செய்தது.

இது இவ்வாறிருக்கையில் தேவலோகத்தில் உள்ள சிகண்டி முனிவர் இசைப்பிரியனாக இசை நுணக்கங்களை அறிய விருப்பமுடையோனாக முருகப்பெருமானிடம் வேண்டுதல் செய்தார். பெருமான் முத்தமிழ் வித்தரான அகத்தியர் தென்பொதிகையில் இருப்பதாகவும் அவரிடம் சென்று அறியுமாறு பணித்தருளினார். இதன் பிரகாரம் சிகண்டி முனிவர் பொதிகை சென்று அகத்தியரிடம் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கதிர்காமக் கந்தனை வழிபாடு செய்யும் நோக்கில் சீடர்களுடன் வந்து கொண்டிருக்கையில் ஜராவசு எனும் கந்தர்வரான யானை அவர்களைத் தாக்க முற்பட்டது. முனிவர் தனது ஞானத் திருஷ்டியினால் சாபத்தையும் விமோசனத்தையும் தெரிந்து முருகப்பெருமானை நினைத்து சண்முக மந்திரத்தை உச்சரித்து அருகில் இருந்த வெற்றிலையை நுள்ளி எடுத்து வேலாகச் சென்று அழிக்க விடுத்தார். வெற்றிலையானது கதிர்வேலாக மாறி யானையை

வீழ்த்த அவ்விடத்தில் கந்தர்வன் தோன்றி தனது வரலாற்றைக் கூற முனிவர்களும் சீடர்களும் அபயம் அளித்து கதிர்காமம் கூட்டிச் சென்று விட்டனர். பின்னர் சிகண்டி முனிவர் ஐராவசு கந்தர்வனிடம் இலங்கையின் வடபால் அமைந்த வல்லி நதிக்கரையில் வீரபாகுதேவர் வணங்கிய புனித இடத்திற்குச் சென்று முருகப்பெருமானை தியானித்து வழிபாடுகள் செய்யுமாறு பணித்தார்.

அதன் பிரகாரம் ஐராவசும் வல்லி நதிக்கரையில் தற்போது பூவரசு விருட்சம் அமைந்த இடத்தில் பெருமானைத் தியானித்து பக்தியுடன் மௌனப்பூசை வழிபாடு செய்து முத்திநிலை பெற்றார். சிகண்டி முனிவர் ஐராவசுவின் சாபத்தைப் போக்க விடுத்த வெற்றிலை இன்று பெருமான் வீதிவலம் வரும் வேளையில் கதிர்வேற் பெருமானின் நடுப்பாகத்தில் காட்சி தந்து பத்திரசக்தி முகூர்த்தம் பரவசம் ஆகிப் பிரகாசிக்கின்றது. ஐராவசு வழிபாடு செய்த இடத்தில் அமைந்த பூவரசு விருட்சம் அடியார்கள் பக்தி கொண்டு பூசித்து துன்பங்களை நீக்கும் தெய்வத்தன்மையை கொண்டுள்ளது. இவ்வாலயத் தோற்றத்துக்கு காரணமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஸ்தாபகரான மருதர் கதிர்காமரின் வரலாறும் இவ்வாறு பக்தி பூர்வமானது. வீரவாகுத்தேவரும் ஐராவசு கந்தர்வரும் பூஜித்து வழிபாடு செய்த இத்தலத்தில் மூன்றாம் ஆளாக அன்பாக பூசை செய்ய ஆளில்லை என்பதனால் தேவலோகத்தில் பணிவிடை செய்த மருதர் கதிர்காமரை இப்பகுதியில் பெருமான் தோற்றுவித்தார். இவ்வாறு தோற்றிய கதிர்காமர் நாள்தோறும் பூவரசு மரத்தடியில் முருகப்பெருமானை வணங்கியே தன் தொழிலை செய்துவந்தார். நாளடைவில் கதிர்காமரின் பரிபக்குவநிலை உணர்ந்த பெருமான் அவர்முன் தோன்றி தனக்குப் பூசை செய்யுமாறு பணித்தார். கதிர்காமர் பதைபதைத்து தனக்கு பூசை முறை தெரியாது என்று கூறவே கண்ணை மூடுமாறு பணித்து அவரை கதிர்காமம் அழைத்துச் சென்று கதிர்காமப் பூசை முறைகளை காண்பித்து வழியில் அவரது

வரலாற்றையும் கூறி ஆழமிலையில் அமுது படைத்து பூசை செய்யுமாறு பணித்தருளினார். கதிர்காமரும் பக்தியுடன் பூசை வழிபாடு செய்தார். இந்நிலை தொடரவே ஆலயம் அமைத்து வாசலில் வலது பக்கத்தில் பெருமான் தோன்றி இடது பக்கத்தில் கதிர்காமரை அமர்த்தி நடக்கவிருக்கும் முறைகளை விளக்கி பக்தியுடன் தொடர்ந்து பூசை செய்யவும் வேண்டிய வேளைகளில் சிரமங்களைப் போக்கி குறையின்றி நடத்தவும் அருள்பாலித்தார். கதிர்காமரும் தினமும் பூசை வழிபாடு முடித்து இடது பக்கத்தில் அமர்ந்து தியானித்து வழிபாடு செய்தது போல அவரது சந்ததியினரும் இன்றும் அவ்வாறே பூசை வழிபாடுகள் முடித்ததும் அமர்ந்து தியானித்து வேண்டுதல் செய்வது வழக்கமாகியுள்ளது. பெருமான் அனுக்கிரகத்தினால் ஆலயம் பொலிவு பெற்று அடியார்களின் நெஞ்சங்களிலும் குடிபுகுந்து சிறப்பாகி வருகின்றது. இவ்வாறு சிறப்பான ஆலயம் அமைந்த கிராமமான தொண்டைமானாறு புராதன உன்னத சரித்திரப் பின்னணியைக் கொண்டுள்ளது. இவ்வாலயத்தின் மேற்குப்புறமாக அமைந்த வல்லி நதியான ஆறு பின்னால் அரசியலுடன் பின்னிப்பிணைந்து முன்பு கடலுடன் சங்கமித்த இந்நதியை மேலே தென்புறத்தே அமைந்த பாலத்தை வல்லைப்பாலம் என்றும் கூறப்பட்டது. இந்த நதியின் தொடுவாயில் தொண்டமான் என்னும் அரசன் நதியினை வெட்டிக் கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது ஆறாகியதுடன் இவ்வாற்றுப் பகுதி தொண்டைமானாறு என்றும் அழைக்கப்பட்டது. கடல் நீருடன் தொடர்பு கொண்டதால் உப்புநீர் ஆற்றின் பகுதிகளுக்குச் சென்று கரணவாய் பகுதியில் உப்பு விளையல் ஆயிற்று. இவ் உப்புக்களை ஆற்றுமுனையில் சேமிக்க நாளடைவில் இக்கரை உப்புமால் எனப்பெயர் பெற்று வாணிபமும் சிறப்பானது.

அக்காலத்தே ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரும் வணிக முறையினால் இப்பகுதிக் காணிகளுக்கு பதிவேடுகள் உண்டாக்கி தோம்பு என்னும் காணி உறுதிகளை

ஏற்படுத்தினர். இத்தோம்பு உறுதிகளில் செல்வச்சந்நிதி ஆலய தோற்ற விபரங்கள் இருப்பதும், தொடர்ந்து ஆலயப்பதிவேடுகள் உண்டாகியதும் பதிவேடு முறையும் உருவாகியதால் திரு. மருதர் கதிர்காமருக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தொடர்பு விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பழமை வாய்ந்த பக்திக்குரிய ஆலயம் 1984 முதல் பல கஸ்டங்களை எதிர்நோக்கி 1986 இல் ஆலயம் பலத்த சேதமாகி உடமைகளின்றி பூசைகளின்றி பூட்டிய நிலையில் இருந்தது. எனினும் பெருமான் திருவருளால் ஆலய உரிமையாளர்கள் அடியார்கள் ஆக்க ஊக்கங்களினால் 1988 மகாகும்பாபிசேகத்துடன் வழமையான பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து பல புனருத்தாரண பணிகள் பூர்த்தியாகி புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. ஆலயப்பணிகளும் அன்றாட வசதிகளும் முன்னேற்றமாகி வருவதோடு யாவரும் பரம திருப்தி பெறுகின்றனர்.

இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு கதிர்காமக் கொடியேற்றத்தின் போது பெருமானை உழுத்தம்புட்டு நிவேதித்து அனுப்புவதும் பின் தீர்த்தமாடிய பின் பயத்தம் துவயலும் இளநீரும் படைத்து வரவேற்பதும் இன்று பக்தியுடன் கொண்டாடும் வழிபாடுகளாக அமைந்துள்ளது. இவ்வூர் ஆண்டியப்பர் என்பவர் இவ்வாலயத்தில் முதல்முதலாக பூசை நேர்த்தியினைச் செய்தார். நாளடைவில் அடியார்கள் பலரும் நேர்த்திகளை செய்து வருகின்றார்கள்.

இன்று நாட்டில் ஏற்பட்ட சமூக சூழ்நிலையால் வெளியூர், வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் பெருமான் ஆலயத்திற்கு வருகை தருவதுடன் ஆலயம் மேலோங்கி வருவதை உணர்ந்து பல்வேறு பங்களிப்புக்களைச் செய்து திருவருளைப் பெறுகின்றனர்.

## முருகேசு சுவாமிகளை ஆட்கொண்ட சந்நிதி வேலவன்

சந்நிதியில் எமது காலத்தில் வாழ்ந்த சித்தர்களில் மிகவும் பக்குவநிலை அடைந்தவரும் அடியவர்களால் நன்கு அறியப்பட்ட ஒரு சித்தராகவும் வாழ்ந்தவர் தான் முருகேசு சுவாமிகள். தேவையும் சூழ்நிலைகளும் பொருந்துகின்ற சந்தர்ப்பங்களில் சித்துக்கள் பல நிகழ்த்தி சித்தர்களுக்குரிய இலக்கணத்துடன் இவரது வாழ்வியல் அமைந்திருந்ததை காணமுடிகிறது. ஆனால் வேட்டி, சால்வை, உருத்திராக்கம் மாலை அணிந்து ஒரு சராசரி அருளாளராகவே இறுதிவரை வாழ்ந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

23.05.1920 இல் பிறந்த முருகேசு சுவாமிகளின் சொந்த இடம் பருத்தித்துறையின் கிழக்கே அமைந்துள்ள தும்பளை என்னும் கிராமமாகும். இவரது இயற்பெயர் வேலுப்பிள்ளை முருகேசு. ஜோதிடம் பார்க்கின்ற குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால் ஜோதிடம் பார்க்கின்ற அறிவும் ஆற்றலும் அவரிடம் நிறையவே காணப்பட்டுள்ளது. ஆனாலும் அதனை அவர் தொழிலாகச் செய்யவில்லை. வியாபாரத்தில் அவருக்கு நாட்டம் இருந்ததால் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற இலங்கையின் வடமத்திய பகுதியில் அமைந்துள்ள மதவாச்சியில் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இறை பக்தி உள்ளவராகவும் முருகப் பெருமான் மீது அளவில்லாத பக்தி கொண்டவராகவும் வாழ்ந்து வந்துள்ளார். இல்லற வாழ்வில் ஈடுபட்டு ஒரு சராசரி மனிதனாகவும் அதேநேரம் செல்வமும் செல்வாக்குமுள்ள ஒரு வர்த்தகராகவும் வாழ்ந்து கொண்டிருந்த முருகேசு சுவாமிகள் தான் ஒரு சித்தராக வாழுவேன் என்பதை அப்பொழுது கனவிலும் சிந்தித்திருக்கமாட்டார். ஆனால் அதற்குரிய காலம் கனிந்தபொழுது சந்நிதியான் அவரை முழுமையாக தன்னுடைய அடியவராக ஆக்குகின்ற திருவிளையாடலை அரங்கேற்றியதை காணமுடிகின்றது.

திருநாவுக்கரவு நாயனாருக்கு சூலைநோய் ஏற்பட்டதுபோல இவருக்கு 1960 ஆம் ஆண்டு வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டது. மகரகமவில் புற்றுநோய்க்குரிய சிகிச்சையும் அளிக்கப்பட்டு வந்தது. மருந்து மாத்திரையால் மாற்ற முடியாதென்பதை பரிசோதனைகள்

வெளிப்படுத்தியது. வைத்தியர்களால் சத்திரசிகிச்சை செய்வதற்கு நாளும் குறிக்கப்பட்டது. தமது குடும்ப வாழ்வில் துயரம் சூழ்ந்துவிட்டதை எண்ணி இவரது துணைவியார் மிகுந்த வேதனை அடைந்தார். எல்லாம் ஆண்டவனின் கையில்தான் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்ட இருவரும் இறைவழிபாட்டில் ஈடுபட்டார்கள். சந்நிதியானது அடியவரான முருகேசு சுவாமிகள் சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பு அளவெட்டியைச் சேர்ந்த அவரது நண்பர் அ. கந்தையாவின் வேண்டுதலை ஏற்று சந்நிதியானிடம் வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு சந்நிதியானிடம் வந்து சந்நிதியான் வாசலில் நின்று சந்நிதியானை உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு வழிபட்டுக் கொண்டிருக்கும் பொழுது கச்சான் விற்பவர் போல தோற்றமளித்த ஒரு பெண்மணி அங்கு வந்து புளியம் இலை அவித்துக்குடி எல்லாம் சரிவரும் என்று இவருக்குச் கூறிச்சென்றுள்ளார். அப்பொழுது தனது துன்பம் ஒருபுறம் இன்னொரு பக்கம் சந்நிதியான் வாசலில் வந்து பயித்தியத்தனமாக கதை கூறுகின்றவர்கள் ஒரு புறம் என தனது மனதிற்குள் சலித்துக்கொண்டுள்ளார்கள். ஆனாலும் வீட்டிற்குள் சென்ற பின் அவரது நண்பர் அ. கந்தையா சந்நிதியானின் வாசலில் நடக்கும் சம்பவங்களை சாதாரணமாக எடுக்கக்கூடாது என்று சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் அந்தப் பெண்மணி கூறியது போல புளியம் இலையை அவித்து அந்நீரை இதில் குறிப்பிட்ட தடவைகள் குடித்துள்ளார். இதன்பின் திட்டமிட்டபடி மகரகமவுக்கு பயணமானார்கள். அங்கே முருகேசு சுவாமிகளுடைய சத்திரசிகிச்சைக்குரிய எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. வழமைபோல சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட இருக்கின்றவருடைய அப்போதைய நோயின் நிலைமைகளை மீண்டும் சரியாக உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனைகள் அங்கே மேற்கொள்ளப்பட்டன. என்ன அதிசயம், முடிவுகள் அனைத்தும் அவருக்கு புற்றுநோய் இருந்தது என்பதற்கான அறிகுறியே இல்லை என்ற விபரங்களையே வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. நோய் எவ்வாறு குணமாகியது? இது எவ்வறு சாத்தியமானது எனக்

குழப்பமடைந்தனர். ஆனால் புற்றுநோய் எதுவும் அவருக்கு இப்பொழுது இல்லை என்பதை மட்டும் குழப்பமின்றி உறுதிப்படுத்திக் கொண்டார்.

ஆம் முருகேசு சுவாமிகள் சந்நிதியானது கருணையையும் திருவிளையாடலையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல உணர்ந்து கொண்டார்கள். சந்நிதியான் வாசலில் வந்து அமர்ந்து அவனது கருணையை எண்ணி தாரைதாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். அன்று முதல் தன்னை முழுமையாக சந்நிதியானுக்கு அடிமையாக்கிக் கொண்டார்கள். இவருடைய துணைவியார் எனக்கு கணவன் வேண்டாம். ஆனால் இவர் உயிர் வாழ்ந்தால் போதும் என்று சந்நிதியானுக்கு நேர்த்தி வைத்து தாலிக்கொடியை கழட்டி கணவன் மனைவி என்ற உறவை விலக்கிக் கொண்டார்கள். அத்துடன் அந்த தாலிக்கொடியை விற்று அன்னதானம் போன்ற அறப்பணிகளுக்கே செலவு செய்து தனது நேர்த்தியை முழுமையாக நிறைவேற்றி வைத்தார்கள்.

சந்நிதியானது சித்தம்போல அவனது திருவிளையாடல் அரங்கேறியது. அன்று முதல் முருகேசு சுவாமிகள் சந்நிதியானுக்கு அடிமையானார்கள். மேலும் அன்று முதல் தன்னை எல்லா வகையிலும் படிப்படியாகப் பக்குவப்படுத்தி சந்நிதியானது முழுமையான திருவருளுக்கு பாத்திரமானார்கள். இதன் பின் ஒரு சித்தருக்குரிய இலக்கணத்துடனேயே அவரது வாழ்க்கைப் பயணம் சென்றுகொண்டிருந்ததை காணமுடிகிறது. ஆனால் வெளிப்பார்வைக்கு அவர் முன்பு போலவே வேட்டி சால்வையுடன் உருத்திராக்க மாலை அணிந்த ஒரு மெய்யடியவர் போலவே தன்னை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

முருகேசு சுவாமிகள் ஒரு சித்தராக தவவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த அதேநேரம் சந்நிதியான் ஆலயத்தில் இடம்பெறுகின்ற கைங்கரியங்கள் அனைத்தும் சிறப்பாக இடம்பெற வேண்டுமென்பது அவருடைய பெரு விருப்பமாக இருந்து வந்தது. சந்நிதியில் இடம்பெறுகின்ற நித்திய பூசைகள், அபிசேகங்கள் போன்றவை அனைத்தும் எந்தவித குறைவுமின்றி நடைபெற

வேண்டுமென்பதில் எல்லோரையும் விட மிகுந்த அக்கறையும் ஆர்வமும் உள்ளவராகக் காணப்பட்டார். 1986ம் ஆண்டு பிரமாண்டமான சித்திரத்தேர் எரிப்பு தொடர்பான அழிவுகள், நெருக்கடிகளைத் தொடர்ந்து சந்நிதியானது நித்திய பூசைகள் முதல் முறையாக தடைப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இது அவருக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது. இதனால் சந்நிதியானுக்கு மீண்டும் நித்திய பூசைகள் ஆரம்பித்து நித்திய நைவேத்தியம் படைக்கின்ற செயற்பாடுகள் தொடங்கும் வரை தானும் அன்னம் உண்பதில்லை என்று விரதம் பூண்டு அதனை இறுக்கமாகவும் கடைப்பிடித்தார்கள்.

சூழ்நிலைகளால் தேவை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் திருவீதி மண் திருநீறாகவும், சந்நிதியானது தல விருட்சமான பூவரசு மரத்தின் காய்ந்த பூவரசம் இலை 10 ரூபாய்த் தாளாகவும் மாறுகின்ற சித்துக்கள் உட்பட பல சித்துக்கள் இவரால் நடந்தேறியது. வாய்பேசாத குழந்தையை பேசவைக்கின்ற செயற்பாட்டையும் நிகழ்த்தியுள்ளார்கள். அக்குழந்தை இன்று பெரியவனாகி முக்கியமாக உற்சவ காலங்களில் ஆலயத்தில் முழுமையான தொண்டுகள் செய்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இதுபோன்று முருகேசு சுவாமிகள் நிகழ்த்திய சித்துக்கள் ஏராளம்.

ஆனால் ஏராளம் அடியவர்களின் துன்பங்கள் துயரங்களைப் போக்கி அவர்களது வாழ்வை நிறைவுபெறச் செய்வதுடன் அவர்களை சந்நிதியானது அடியவர்களாக தொடர்ந்து வாழ்வதற்கு ஆற்றுப்படுத்திச் சென்றதுதான் அவருடைய அரும்பெரும் பணியாக இருந்தது. அதனை அவர் அடியவர்களுக்காக அவர்கள் வாழ்விடங்களுக்கே நாடிச்சென்று செய்ததையும் காணமுடிகிறது. இதனால் அந்த குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றி ஒளி வீசுகின்ற தீபமாக இன்றும் அவர் பிரகாசித்துக் கொண்டிருப்பதை காணமுடிகின்றது. முருகேசு சுவாமிகளின் வாழ்க்கைப் பாதையிலும் அவர் ஆற்றுப்படுத்திய அடியார்கள் வாழ்விலும் நடைபெற்ற அற்புதங்கள் ஏராளம்.

அடியவர்கள் மகிழ்ச்சியே இவரது மகிழ்ச்சியாக இருந்துள்ளது. அதேநேரம் அடியவர்கள் இவரை சாமியார் என்று அழைப்பதைக் கூட விரும்பாத ஒரு சராசரி மனிதனாகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளார். இவரை “சாமி ஐயா” என்றுதான் அழைத்தனர். முருகேசு சுவாமிகள் ஒரு சித்தராக மானிடத்தின் மேல் காருண்யம் நிறைந்த மீட்பராக எவ்வாறு செயற்பட்டார் என்பதை அடியார்கள் ஓரளவேனும் விளங்கிக் கொள்வதற்காக அவரின் வாழ்க்கைப் பாதையில் இடம்பெற்ற சில நிகழ்வுகளை இங்கே வெளிப்படுத்துவது பொருத்தமானது. 1980 ஆம் ஆண்டு காலகட்டம் சிறுப்பிட்டியில் சுவாமிகள் ஒரு வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார்கள். அவ்வாறு சென்றுகொண்டிருந்தவர் தீடீரென குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு சாரதியிடம் சொல்லுகின்றனர். நிறுத்தப்பட்ட வாகனத்திலிருந்து இறங்கிய சுவாமிகள் சில இளைஞர்கள் உரையாடிக் கொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்து செல்கின்றார். அங்கே சென்றவர் முன்பு என்றுமே அறிமுகமில்லாத அந்த இளைஞனை அணுகி அவருடன் ஏதோ கதைக்கின்றார். அவ்வாறு சிறிதுநேரம் கதைத்தவர் அந்த இளைஞனை தன்னுடன் அழைத்துவந்து தான் பிரயாணம் செய்த வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அவனுடைய சகஜமாக உரையாடிய வண்ணம் தனது பிரயாணத்தை தொடருகின்றார். அவ்வாறான அந்த இயல்பான உரையாடலின் நடுவிலே “தம்பி உனது சாரத்திற்குள் இருப்பதை எடு. அதை முதலில் எடுத்து என்னிடம் தா என்று அந்த இளைஞனிடம் கேட்கின்றார்.

இதனை எந்த வகையிலும் எள்ளளவும் எதிர்பார்க்காத அந்த இளைஞன் வியப்பும் பரபரப்புமடைகின்றான். ஆனால் பாம்பாட்டிக்கு கட்டுப்பட்ட நாகம் போல் தனது சாரத்துக்குள் மறைத்து வைத்திருந்த நஞ்சு மருந்து போத்தலை எடுத்து சாமியாரிடம் கொடுக்கின்றான். ஆம் சிறிது நேரத்தில் தனது உயிரை மாய்த்துக் கொள்வதற்காக கடையில் வாங்கித் தயாராக வைத்திருந்த நஞ்சு மருந்துதான் அது. தனது வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் தாங்கமுடியாத

மனவேதனை அனுபவித்த அந்த இளைஞன் இவ்வாறு தனது உயிரை மாய்த்துக் கொள்கின்ற விபரீதமான முடிவை எடுத்துவிட்டிருந்த நிலையில் இன்னும் சிறிதுநேரத்தில் தனது உயிரை மாய்த்துக்கொள்ள இருந்த சந்தர்ப்பத்தில்தான் முருகேசு சுவாமிகளால் அவன் அங்கு காப்பற்றப்பட்டிருக்கின்றான்.

ஞானநிலை அடைந்த மகான்களை எம்மால் அளவிடமுடியாது. தேவையும் சூழ்நிலைகளும் ஏற்படும்பொழுது அவர்களை தனது மகனாக, மகளாக, பேரக்குழந்தையாக, நெருங்கிய உறவுக்காரராக உள்வாங்கி பூரண விசுவாசத்துடன்தான் அதனை மேற்கொள்வார். முருகேசு சுவாமிகளிடம் எப்பொழுதும் பழைய பொருட்கள் அடங்கிய ஒரு சில பொட்டலங்கள் காணப்படும். பயன்படுத்திய பல்வேறு உடுப்புக்கள் தொடக்கம் கைவளையல்கள் வரையான இந்த பழைய பொருட்களே இவைகளாகும். ஆம் துன்பங்கள், துயரம் உள்ளவர்களிடம் அல்லது துன்பங்கள் துயரங்களை எதிர்நோக்கப் போகின்றவர்களிடம் இயல்பாக உரையாடுவது போல உரையாடி அவர்கள் அன்றாடம் பாவித்துக்கொண்டிருக்கும் ஏதோ ஒரு பொருளைப் பெற்றிருப்பார். இவற்றை அவர்களின் அடையாளமாக வைத்துக்கொண்டு அவர்களின் துன்பங்களை தனது துன்பமாக தன் தலைமேல் ஏற்று நாளும்பொழுதும் அவர்களுக்காக இறைவனிடம் மன்றாடி இறைவனைப் பிரார்த்தனை செய்து அவர்களது துன்பங்களைப் போக்கி மற்றவர் வாழ்வில் ஒளியேற்றிய மகானாக இவர் வாழ்ந்துள்ளார். மானிட உடல் தாங்கியிருந்தாலும் தெய்வங்கள் போல கருணை செய்து எமது மண்ணில் வாழ்ந்த மகான்களே இவர்கள்.

கலியுகத்தில் அறத்திற்கு புறம்பான செயற்பாடுகளால் நாம் எதிர்நோக்கும் துன்பங்கள் துயரங்களிலிருந்து விடுபட ஒரே வழி தூய்மையான பக்தி மார்க்கமே என்பதை முருகேசு சுவாமிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனை போதனையால் அல்லாமல் வாழ்வியல் சாதனையாக அடியவர்களுள் தானும் ஒருவராக இருந்து

அவர்களை பல்வேறு பக்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களை மீட்டெடுத்துள்ளார். இது முருகேசு சுவாமிகளினுடைய ஒரு தனித்துவமான செயற்பாடென்றே கூறலாம். இது ஒரு இலகுவான காரியம் அல்ல என்பதை முருகேசு சுவாமிகள் உணர்த்திருந்தார்கள். அவருடன் கூட இருந்தவர்களும் பெருமளவுக்கு அதனை புரிந்துகொண்டவர்களாக காணப்பட்டனர்.

முருகேசு சுவாமிகளுடன் பல வருடங்கள் பழகுகின்ற பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது. ஒரு சராசரி மனிதர் போலவே அடியேனுடன் பழகிக்கொண்டார்கள். ஆனாலும் ஒரு சம்பவத்தை மேலோட்டமாகவேனும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. ஒருமுறை எனது மகள் தொடர்பான அடியேனும் ஒரு துயரமான நிலையை எதிர்நோக்கியிருந்தேன். அப்பொழுது முருகேசு சுவாமிகள் "மாஸ்ரர் யோசிக்காதையுங்கோ முருகன் கைவிடமாட்டார்" என சாதாரணமாக ஆறுதல் வார்த்தை கூறுவது போல் கூறியிருந்தார். ஆனால் அந்த வார்த்தை வேத வாக்காக மாறியது. ஒளியைக் கண்ட இருள்போல அந்த துயரம் விலகிச்சென்ற அற்புதம் அங்கே அரங்கேறியது.

முருகேசு சுவாமிகள் தான் சமாதி அடையப்போகும் இறுதிநாளையும் நேரத்தையும் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமை தான் சாமாதி அடையப்போவதை ஏற்கனவே அருணாசலம் என்ற அந்த அன்பருக்கு கூறிவந்துள்ளார்கள். அதேபோல் ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தனக்கு தேநீரும் பிஸ்கட்டும் தருமாறு கேட்டுவாங்கி அவற்றை அருந்தியுள்ளார். அதன் பின் தனது கழுத்தில் அணிந்திருந்த உருத்திராக்க மாலையை கழட்டி அதை குறிப்பிட்ட ஒரு நபரிடம் வழங்குமாறும் கூறியுள்ளார். அதன் பின் சிறிது ஓய்வாக உறக்கம் கொண்டவர் அவ்வாறே சமாதியடைந்துள்ளார்.

(சந்நிதியில் சித்தர்கள் நூலிலிருந்து சுருக்கமாக)

## சந்நிதியில் நடமாடும் முருகன்

செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையினால் கடந்த 2 வருடங்களாக ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் அறநெறி பாடசாலையின் மாணவர்களின் நிகழ்வுகளும் பெரியவர்களின் சொற்பொழிவுகள், வில்லுப்பாட்டு, இசைக் கச்சேரி என முருக அடியார்களினால் நிகழ்த்தப்படுவது அனைவரும் அறிந்ததே. கடந்த வருடம் கந்த புராணத்தின் 6 காண்டங்களையும் சுருக்கமாக அடியவர்களுக்கு இலகுவாக புரியும் வகையில் சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்திருந்தோம். விரத காலம் என்பதால் பிள்ளையார் வாசலில் அந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தோம். ஒவ்வொரு நாளும் சொற்பொழிவிலிருந்து கேள்விகள் கேட்டு பதில் கூறிய சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவது வழமை. ஒவ்வொரு நாளும் பல சிறுவர்கள் சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்க சுற்றிவர இருந்து கேள்விகளுக்கு பதில் சொல்வதற்காக குறிப்பெடுத்துக் கொண்டிருப்பது வழமை. அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது வேறு சிறுவர்களும் இந் நிகழ்வில் பங்கு பற்றுவது வழக்கம். இவ்வாறு தினம் தினம் கந்தபுராண சொற்பொழிவு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒரு நாள் பெரியோர்கள் மத்தியில் ஒரே ஒரு சிறுவன் மட்டும் மிக்க ஆர்வத்துடன் சொற்பொழிவாளருக்கு மிக அருகாமையிலிருந்து மிக்க ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். சொற்பொழிவு முடிந்த பின் ஒரு சிறுவன் தானே இருக்கின்றான் என நினைத்து நாளை பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு நிகழ்ச்சியை முடித்து வீடு செல்வதற்கு ஆயத்தமானோம். அச்சமயத்தில் செல்லும் பாதையில் கோயிலுக்கு அருகாமையில் ஆள் நடமாட்டமில்லாத ஆற்றங்கரையோரமாக இருந்துவந்த ஒரு பெரியவர் "கந்தபுராண சொற்பொழிவு நன்றாக இருந்தது ஏனம்மா இன்று கேள்வி கேட்டு பரிசு கொடுக்கவில்லை என்று வினாவினார்" இன்று சிறுவர்கள் இல்லையென்று நான் கூற ஏன் ஓர் சிறுவன்

இருந்தான்தானே எனக்கூறினார். சரி நாளைக்கு கொடுக்கின்றேன் என்று வீட்டுக்குச் சென்றோம். இச்சம்பவத்தை திரும்பத் திரும்ப நினைக்கும்போது முருகப்பெருமான்தான் கந்த புராணத்தொடர் சொற்பொழிவுக்கு சிறுவன் வடிவில் வந்து கேட்டு எங்களின் முயற்சிக்கு தன் ஆதரவையும் அருளையும் அளித்துள்ளார். இந்த அதிசயத்தை இன்று நினைத்தாலும் என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

முருகபக்தை,
தமிழ்ச்செல்வி மதியழகன்
(அதிபர் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை)

**சந்நிதியான்**

எந்நிதியும் தருவான் எங்கள் செல்வச் சந்நிதியான். தொண்டைமானாற்றங் கரையிலே பூவரசமர நிழலிலே குடிகொண்ட எம்பெருமான் தன்னை நாடி வருபவர்களின் கவலைகளைப் போக்கி அருள் புரிகின்ற வேலன். கருணை உள்ளம் கொண்ட கந்தன் எம்மைக்காத்து நிற்கும் கதிர்வேலன். தொண்டைமானாற்றில் நீராடினால் தீராத நோய்களும் தீர்ந்து போகும். வாய் கட்டி பூசை செய்யும் முறையும் ஆலமிலை அமுதும் தனிச்சிறப்பு. நித்திய வெள்ளி தனிலே சிறப்பான பூசைகள் திரளாக நிகழ்ந்து வரும் மக்கள் கூட்டம். வேலுண்டு வினையில்லை என்பதை போல் கம்பரமாய் நிமிர்ந்து நிற்கும் மூலஸ்தான வேலும் ஓங்கி ஒளித்திடும் காண்டாமணி ஓசையும் அடியவர் மனங்களிலே ஆறுதலை அளித்திடும். எத்தனை கவலைகளோடு வந்தாலும் அத்தனை கவலைகளும் காற்றோடு காற்றாக பறந்து விடும் எம் சந்நிதி தனிலே!

தி. கீர்த்திகா,
புளியங்கூடல்.

## வீண் போகாத எனது வழிபாடு

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சூழலில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக எனது குடும்பம் வாழ்ந்து வருகிறது. முருகனுடைய அதிவிஷேச பக்தராக என்றும் நாம் வாழ்ந்து வருகின்றோம். வெள்ளிக்கிழமைகளில் மட்டுமல்லாது ஆவணி மாத மகோற்சவ காலங்கள் மற்றும் முருகனுடைய விஷேச காலங்களிலும் விரதம் இருந்து நானும் எனது குடும்பத்தவர்களும் ஆலய வாசலில் சூடமேற்றி உள்வீதி வெளிவீதி என்பன முருகனுக்காக வழிபாட்டு முறைகளை அனுஸ்டித்து வருவது எமது தலையாய கடமைகளில் ஒன்று.

விநாயகப் பெருமானின் சகோதரனான முருகப்பெருமானின் துணையோடு ஆரோக்கியமாக வாழ்ந்து வந்த நான் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக எனது காலில் ஏற்பட்ட ஓர் வியாதி காரணமாக நடமாட முடியாத நிலையில் ஒருவராக என்றும் போல் கணவனின் உதவியோடு சந்நிதி முருகனை தரிசிக்க வருவதில் எந்த விதமான மாற்றமும் இல்லாது வந்து வணங்கிச் செல்வேன்.

நோயின் நிமிர்த்தம் அரச வைத்தியசாலை மற்றும் தனியார் மருத்துவமனை என்பவற்றில் சிகிச்சை பெற்றிருந்தும் காலில் ஏற்பட்ட (புண்) மாறாத நிலையில் பொருளாதார கஸ்டம் காரணமாக செய்வதறியாத எனது குடும்பம் பெரும் துன்பத்தோடு வாழ்து வரும் வேளையில் ஒரு நாள் முருகன் கனவில் தோன்றி மகளே உனது வேதனையை யான் அறிவேன் மேற்கு வீதியில் நிழல்படுகின்ற பூவரசு மரமானது அது சாதாரணமானது அல்ல. நீ இன்றே எனது ஆலய சூழலில் எனது மருந்தாகும் விளக்கின் நெய் (எண்ணெய்) எடுத்து தினமும் காலில் பூசி வருவாயாக என கூறி சந்நிதி முருகன் மறைந்து போனார்.

முருகனின் தரிசனம் முதலில் இருந்த நம்பிக்கையை மேலும் அதிகமாக்கியது. மறுநாள் சந்நிதியானிடம் சென்று நடந்தவை பற்றி அவன் வாசலில் கூறி கண்ணீர் வடித்து ஆலய விளக்கெண்ணையை மருந்தாக நினைத்து விரதமிருந்து காலில் பூசி வந்தேன். அவ்வகையிலான சிகிச்சையின் பின்னர் தற்போது மெல்ல

மெல்ல குணமடைந்து வருகின்றேன். பூவரசு மரத்தடியில் முருகன் மேல் எனக்கு பெரும் நம்பிக்கை தந்திருப்பது என்னால் மறக்கமுடியாது என்பதாகும்.

"கடவுளை நம்பியோர் கைவிடப்படார்" எனும் தரிசனம் நிறைந்த வாக்கியம் என்னை இன்று நிமிரவைத்து எனது அன்றாட தேவைகளையும் ஆலயம் சென்று வரக்கூடியதாக உடல் ஆரோக்கியத்தையும் பெற்று வருகிறது. பல நாமங்களைக் கொண்டிருக்கும் செல்வச் சந்நிதி பதியில் அமர்ந்து அருள்பாலிக்கின்ற முருகப்பெருமானின் தரிசனம் காட்டிய நல்வழியும் என்றும் நினைவு கூறத்தக்க நற்காரியம் என்பதை பக்தடே காடிகளுக்கு எனது வாழ்வின் அனுபவத்தினை இக்குறிப்பினில் பதிவு செய்து சந்நிதி முருகனை மனதார வணங்கி முருகனுக்குரிய நன்றியை அடியார்களுக்கு தெரியப்படுத்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

முருகனின் நினைவோடு
திருமதி நிர்மலாதேவி சுந்தரலிங்கம்
தொண்டமானாறு.

**சந்நிதி முருகன்..**

இலங்கையில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்று எமது செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகும்.

அன்னதானக் கந்தன் என பெயரெடுத்த வேல் முருகா!
பசியோடு வந்தோரை பசியாற வைத்தீரே வேல்முருகா!
உனது திருவடியில் காவடிகள் பல வேல்முருகா!
அதில் எதைக்கண்டு மகிழ்வேனோ வேல்முருகா!
ஆவணியில் உன் திருவிழாவைக் கண்டேனே வேல்முருகா!

T. கருணிகா,
தரம் - 04,
தொண்டைமானாறு சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை

## சந்நிதி வேலன் துணை

சந்நிதியான் பக்தராகிய நான் யாழ் மாவட்டத்தை சேர்ந்தவள். எனக்கு சந்நிதியான் மீது அளவு கடந்த நம்பிக்கை. எனது வீட்டில் உள்ள குழந்தைக்கு சமீபகாலமாக வயிற்று வலி என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தோம். யாழ்ப்பாண பிரபல குழந்தை வைத்திய நிபுணரிடம் காட்டினோம். அவர் ஒரு ஸ்கான் எடுத்து பார்த்தால் நல்லது என்ற கூறினார். ஸ்கான் எடுத்துப்பார்த்து இது சாதாரண விடயம்தான் என்றாலும் எமது ஸ்கானை வைத்து எதையும் கூறமுடியாது. கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஸ்கான் எடுத்தால்தான் எல்லாம் தெரியும் என்று கூறினார்கள். கொழும்புக்கு குழந்தையை கூட்டிட்டு செல்வதற்கு முன்னர் சந்நிதியான் ஆற்றில் நீராடி அங்கப்பிரதட்சணம் வேலனைச் சுற்றி மேற்கொண்டேன். இவ்வாறு எனது நேர்த்தியை முடித்த பின்னர் உணவருந்திக் கொண்டிருந்த வேளை ஒரு முதியவர் எனது அருகில் வந்து உணவருந்திய பின் என்னை சந்திக்குமாறு கூறிச் சென்றார். உணவருந்திய பிற்பாடு அந்த முதியவரை நான் தேடினேன் எனினும் தானாக அந்த முதியவர் எனக்கு அருகில் வந்து உனது வீட்டிற்கு சரியாக தெற்கு திசையில் உள்ள பிள்ளையாருக்கு ஒன்பது தேங்காய் அடிக்குமாறு ஒன்பது தேங்காய்க்கு கண் தெரியக்கூடாது என்று இந்த நேர்த்தியை செய்வதற்கு தடைகள் ஏற்படும் எனினும் செய்து முடி என்று கூறியதுடன் நான் கூறியதை உனது வீட்டில் உள்ள ஒருவருக்கு மட்டும் தெரியப்படுத்துமாறு கூறினார். அத்துடன் நான் யாருக்கும் சாத்திரம் சொல்வதில்லை என்று தன்னை சந்நிதி வேலன் அனுப்பியதாகவும் கூறிச் சென்றார். சந்நிதியான் கருணையால் எனது நேர்த்தியை பூரணமாக செய்து முடித்தேன். அதன் பின்னர் எனது குழந்தையை ஸ்கான் எடுத்து பார்த்தபோது பயப்பட தேவையில்லை என்றும் பெரியளவு மாற்றத்தையும் உணர்ந்தோம். எனது குழந்தையை சந்நிதியான் தொடர்ச்சியாக காப்பாற்றுவார். சந்நிதி வேலனை எனது உயிருள்ளவரை நான் மறவேன்.

சந்நிதியான் பக்தை.

## காத்தருளிய கந்தன்

செல்வச்சந்நிதி வேலனின் ஆலய சூழலில் அன்னதானமடம் ஒன்றை அமைத்துள்ளோம். எமது அன்னதான மடத்திற்கு பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளில் அன்னதானம் செய்து வருகின்றோம். மேலும் திருமண ஓடர் சாப்பாடுகளும் செய்து வருகின்றோம். ஒரு வெள்ளிக்கிழமை நாளில் வழமைபோல் அன்னதான நிகழ்வு இடம் பெற்றது. அன்று முருகன் அடியார்களும் அதிகமானவர்கள் வந்து சாப்பிட்டுச் சென்றார்கள். அன்றைய தினம் வேறு ஒரு நாளுக்கான திருமண ஓடர் சாப்பாடு செய்வதற்குரிய பணம் ஆக ரூபா ஒரு லட்சம் ரூபாவினை திருமண வீட்டுக்காரர்கள் என்னிடம் கதைத்து என் கையில் தந்தார்கள் நானும் அப்பணத்தை வாங்கிவிட்டு எனது வழமையான வேலையில் இருந்துவிட்டேன் அன்னதானம் சிறப்பாக நடைபெற்று பாத்திரங்கள் கழுவி மடத்தை பூட்டிவிட்டு வீட்டுக்கு சென்றுவிட்டேன். மறுநாள் எனது மனையிடம் மேற்படி திருமண ஓடருக்கான ஒரு லட்சம் ரூபாய் உங்களிடம் தந்தேன் அதை தந்தால் கடைக்கு சென்று பொருட்கள் வாங்க வேண்டும் எனக் கூறினேன். மனைவியோ என்னிடம் நீங்கள் பணம் தரவில்லை எனக் கூறினார். எனக்கு பணம் எங்கு வைத்தேன் என்ற ஞாபகம் கொஞ்சம் கூட இல்லை. ஆனால் மனைவியிடம் கொடுத்ததுபோல் ஒரு ஞாபகம் இருந்தது. ஆனால் அதை அவர் ஏற்கவில்லை. எங்கு வைத்தேன் என பகல் முழுவதும் யோசித்தும் ஞாபகம் வரலில்லை. இரவு படுத்து விட்டேன் கனவில் அவ் ஒரு லட்சம் ரூபா காசு எமது மடத்தில் உள்ள சிறிய வைரவர் ஆலயத்திற்கு பின்புறமுள்ள மேசையில் இருப்பதாக கனவு கண்டேன். காலையில் நித்திரை விட்டு எழும்பும் போது கனவு ஞாபகத்திற்கு வந்தது. நிஜத்தில் அவ்விடத்தில் நான் பணம் வைத்த விடயம் இதுவரை ஞாபகம் இல்லை எனது வீட்டில் இருந்து மடத்திற்கு வந்து எமது குல தெய்வமான வைரவப்பெருமானின் சிறிய கோவிலுக்குப் பின் உள்ள மேசையில் ஒரு லட்சம் ரூபாய் இருந்தது. அதை எடுத்து சந்நிதி வேலனையும் வைரவப் பெருமானையும் வணங்கி கண் கலங்கி நின்றேன். பணம் தரப்பட்ட வெள்ளிக்கிழமை பலர் வந்து சென்ற

போதும் கூட பணம் களவாடப்படாமல் இருந்துள்ளது. அது மாத்திரமல்லாமல் பணம் எங்கு வைத்தேன் என்ற ஞாபகம் இல்லாத போது கனவில் அதைக்காட்டி என்னிடம் ஒப்படைத்தது சந்நிதி கந்தனின் அற்புதமே.

முருகன் அடியார் அனைவருக்கும் சந்நிதி கந்தன் அருள் கிடைக்கட்டும்!

## எந்நிதியும் தந்திடுவான்

எந்நிதியும் தந்திடுவான் சந்நிதியின் மன்னவனே
சந்தமும் உந்தன் புகழ் பாடுவோம்.
யாமிருக்கப் பயமேன் வாசகம் உன் அரண்மேல்
நாமம் அது கந்தனென்று கூறுவோம்
அன்னதானக் கந்தனின் அன்பர் உள்ளம் கொண்டேன்
இவன் மூலவராய் வேல்வடிவில் நின்றானிவன்
தண்ணரியாய் நல்கும் அருள் தாயகத்தை காக்கும் என
உன்பாதத்தை நாடி நின்றோம் காப்பாய் ஐயா!

சூலும் வினை போக்கி சுந்தரத்தை தேக்கி
ஆளும் எமை ஐயா! செல்வா
காவடிகள் சூழும் உந்தன் வாசல் வந்தோம்
கந்தா என்று சொல்லி கைகள் சிரம் கொண்டோம்

முருகா முருகா ஓம் முருகா......
வீரபாகுதேவர் சிவ பூசை வந்து செய்த தலம்
வல்லி நதி தீரமுள்ள முன்னைத்தலம்
ஆற்றங்கரை வேலனென்றும் ஆலமிலை ஆமுதனென்றும்
போற்றி நிதம் உன்னினைவில் வாழ்வோம் ஐயா
கூற்றுவரை கொன்றொழித்து கொள்கைகளை வென்றளித்து
வாட்டமுறு ஏழையர் கண் பாரும் ஐயா
சந்நிதியின் மன்னவனே காற்று புகழ் கொண்டவனே
கண்ணனையாய் நல்லவழி காட்டும் ஐயா

முருகா முருகா......

லலீசன்.

## சந்நிதி வேலனின் அற்புதம்

செல்வச் சந்நிதிவேல் பெருமானின் ஆலய சூழலில் இருந்து வேல் பெருமானுக்குரிய தொண்டுகள் அவன் அருளாளே அவன் தாழ் வணங்கி என்பதற்கேற்ப தொண்டாற்றி வருகின்றேன்.

என்னுடைய அனைத்து தேவைகளையும் சந்நிதி வேலனே செய்து தருவதாக உணர்கின்றேன். சந்நிதி வேலனிடம் வரும் அடியார்களை கண்டு மகிழ்ச்சியடைவது அவர்களின் வேண்டுதலைப்பார்த்து மெய் மறந்து நின்று ரசிப்பேன். பலர் என்னிடம் வந்து கதைப்பார்கள். அடியேனும் அவர்களுடன் சந்நிதி முருகனின் சிறப்புக்களை கூறி அவர்களை சந்தோசமாக ஆலய தரிசனம் செய்யும் வண்ணம் கூறுவேன். இவ்வாறான தருணத்தில் எனக்கு கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செய்ய வேண்டும் என ஓர் உள்ளுணர்வு ஏற்பட்டது. ஆனால் அதற்குரிய அனுபவமோ யாருடன் செல்வது என்ற திட்டமிடலோ எதுவும் இருக்கவில்லை. திடீரென ஒரு நாள் மட்டக்களப்பில் இருந்து ஒரு தெரிந்த நபரொருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்நிதியில் இருந்து நடைபாதையாக கதிர்காமம் யாத்திரை செல்ல எண்ணியுள்ளோம் நீங்களும் வருகின்றீர்களா? சந்நிதியில் இருந்து செல்வோம் எனக்கேட்டு வழமையாக நாங்கள் மட்டக்களப்பில் இருந்தே செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இந்த வருடம் சந்நிதியில் இருந்து யாத்திரை செல்வதாக கனவு கண்டதினால் அங்கிருந்து செல்லவுள்ளதாகவும் எனவே உங்களையும் கூட்டிசெல்வோம் என்ற நினைப்பில் போன் பண்ணியதாக கூறினார். எனக்கும் மிக்க மகிழ்ச்சி ஏன் என்றால் எனக்கும் சந்நிதியில் இருந்து பாதயாத்திரை செல்ல வேண்டும் என்ற விருப்பம் இருந்ததினால் அதற்கு என்ன நானும் வருகின்றேன் எனக்கூறி கதைத்து அதற்குரிய ஏற்பாடுகள் செய்து 2017 ஆம் ஆண்டு சந்நிதியில் இருந்து கதிர்காமத்திற்கு பாதயாத்திரையாக சென்று அடைந்தோம். பாத யாத்திரையின் போதும் சந்நிதி வேலனின்

கண்காணிப்பில் சென்று வந்தது போல் ஒரு உள் உணர்வு ஏற்பட்டது. அவ்நிலையில் பேரின்பத்தை ஒரு தடவை உணர்ந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. எங்களைப்போல் பலர் இது போல் பாதயாத்திரை செய்து மன நிம்மதி அடைந்துள்ளார்கள் அனைவருக்கும் சந்நிதி வேலன் அருள் புரிவாராக!

நன்றி

முருகன் அடியார்.

**அற்புதக்கந்தன் புகழ்**

ஆற்றிலே தோய்ந்து பூவரசமரத்தடியில் அமர்ந்திருந்து கேட்போருக்கு வரமருளும் சந்நிதிக் கந்தன் அவன் புகழ் பாடிடுவோம்.

தீராத நோய்கள் எல்லாம் தீர்த்து அருளும் முருகன் அந்த ஆற்றங்கரையானைத் தினம் தினம் போற்றிப் புகழ்ந்து பாடுவோம்.

தன்னை நாடி வருவோர்க்கு அன்னதானமளித்துப் பசியினை போக்கிப் பக்குவமாய் வீடு அனுப்பும் வேலன் அவன் புகழ் பாடிடுவோம்.

திரு. நகுலேஸ்வரி (ரதி)
புளியங்கூடல்.

## சந்நிதியானின் புனித பூமியில் நான் கண்ட அற்புதங்கள்

அடியவர்களின் எளிமையான பக்தியில் அற்புதம்.

முருகனின் முன்னால் நின்று கண்ணீர் சொரிய வழிபடும் பக்தர்கள் அற்புதம்.

தலவிருட்சமான பூவரச மரத்தடியில் தியானம் பிரார்த்தனை இருக்கும் பக்தர்களில் ஞானியர் தெரிவது அற்புதம்.

அங்கே தொட்டில்களைத் தொங்கவிடும் நம்பிக்கையில் அற்புதம்.

சந்நிதியானின் பூசைக்கு ஆயத்தமணி அடித்த பின்பு வாசல் கதவு திறக்கும் வரை நின்றபடியே காத்து நிற்கும் பக்தர்கள் அற்புதம்.

வெளிநாடுகளில், ஊர்களில் இருந்து நீண்ட காலத்திற்கு பின் வரும் அன்பர்கள் “முருகா முருகா” என்று காணாமல் இருந்த தாகத்தைத் தீர்க்க ஓடோடி வந்த முருகனின் சந்நிதானத்தில் விழுந்து வணங்குவதில் அற்புதம்.

சந்நிதி கோயில் ஸ்தாபகர் கதிர்காமர் ஐயாவிற்கு 6 பிள்ளைகள் இவர்கள் ஆறுமுகங்களின் அவதாரங்கள் அற்புதம்.

இப்பரம்பரையில் வந்த சந்ததிகள் இன்றும் தமக்குள் ஒழுங்கையும், கட்டுபாடுகளையும் முறையாக கடைப்பிடித்து முருகனுக்குரிய பூசைகளையும் கோயில் நிர்வாகத்தையும் திருப்பணியையும் அழகு செய்து வருவது அற்புதம்.

பூக்காரர்கள் என்றழைக்கப்படும் அடியார்கள் திருவிழா தொடர ஒரு கிழமைக்கு முன்பாகவே விரதமிருந்து தீர்த்தம் குடித்து வீடுகளுக்கோ வேறு இடங்களுக்கோ சென்று தங்காமல் முருகனின் சுற்றாடலில் தங்கியிருந்து அப்பனின் திருவிழாவை தூய மனத்துடன் அர்ப்பணிப்புடனும் கொண்டாடுவது அற்புதம்.

வேற்பெருமான் திருவீதி உலா வந்தபின் வண்ண வண்ண ஆடை அலங்காரத்துடன் மிகுந்த பக்தியுடனும் விளக்கெடுத்து ஆராத்தி செய்வது அற்புதம்.

சந்நிதி என்றாலே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விசேஷம் தான். ஊர்ப்பெண்களும், பூக்காரரும் கோயிலைச் சுத்தம் செய்ய வியாழக்கிழமையே கூட்டிக் கழுவி அடுத்த நாளுக்காக ஆயத்தம் செய்வது அற்புதம்.

வெள்ளிக் கிழமைகளில் முருகனை தரிசித்த பின்புதான் தங்கள் வேலையை ஆரம்பிப்போம் என்று அதிகாலையில் வந்து பூசையைப் பார்க்க காத்துநிற்கும் அடியவர்கள் அற்புதம்.

முருகனின் பிரசாதமாக மருந்தாக "ஆலமிலை அமுதை" வாங்கி உண்ணும் அடியவர்கள் அற்புதம்.

கோயிலிலும் கோயிலைச் சுற்றியுள்ள மடங்களிலும் ஒவ்வொரு நாளும் அடியவர்களுக்கு அன்னதானம் படைப்பது அற்புதம்.

காவடிக் கந்தனுக்கு காவடிகள், தூக்குக்காவடிகள், பால்செம்புகள், கரகம் எடுக்கும் பக்தர்களின் பக்தி அற்புதம்.

பஜன் பாடும் பக்தியில் பரவசம் அற்புதம்.

முருகனின் பாதங்களே சரணம் என்று அவன் பாதம் பணிந்தோருடன் எப்போதும் அவன் பயணிப்பான்.

சுபம்

தமிழ்ச்செல்வி மதியழகன்
(ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர்)

# V. ARIARATNAM & CO
CHARTERED ACCOUNTANTS

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் திருப்பணிச்சபை

31.12.2017 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | | |
|---|---|---|
| **திரண்ட நிதி** | | |
| 01.01.2017இல் உள்ள மீதி | 4,204,173.44 | |
| இவ் ஆண்டு செலவிலும் கூடிய வருமானம் | 455,803.77 | 4,659,977.21 |
| | | **4,659,977.21** |
| **பிரதிநிதிப்படுத்தல்** | | |
| நிலையானசொத்து - இரும்புப்பெட்டகம் | | 74,500.00 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| பொருள் இருப்பு பவுண் | 377,880.50 | |
| இலங்கை வங்கி சேமிப்பு கணக்கு 7345848 | 2,431,308.04 | |
| இலங்கை வங்கி சேமிப்பு கணக்கு 72090184 | 213,327.46 | |
| செலான் வங்கி சேமிப்பு கணக்கு 0138424 | 135,384.82 | |
| கொமர்சல் வங்கி சேமிப்பு கணக்கு 8108036333 | 568,509.12 | |
| கொமர்சல் வங்கி சேமிப்பு கணக்கு 8108036334 | 15,919.12 | |
| மக்கள் வங்கி சேமிப்பு கணக்கு 285200100018920 | 82,611.00 | |
| காசுக் கையிருப்பு | 760,537.15 | 4,585,477.21 |
| | | **4,659,977.21** |

செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு

தலைவர் செயலாளர் பொருளாளர்

31.12.2017 இல் உள்ளபடியான ஐந்தொகையும் 31.12.2017இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக்கணக்கும், பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கும் வரவு சிட்டைகள், வங்கி சேமிப்புப்புத்தகம் கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள், காசேடு பேரேடு ஆகியவற்றுடன் எம்மால் சரிபார்க்கப்பட்டது. காசுக்கையிருபபு எம்மால் எண்ணிச் சரிபார்க்கப்படவில்லை

எங்கள் அபிப்பிராயப்படி மேலே தரப்பட்டுள்ள ஐந்தொகையும் வருமானச் செலவுக் கணக்கும் இத் திகதியிடப்பட்ட எமது அறிக்கைக்கு அமைவாக ஆலயத் திருப்பணிச் சபையின் நிதி நிலமையை சரியாக பிரதிபலிக்கின்றது.

யாழ்ப்பாணம்
22.03.2017

வே. அரியரெட்ணம் அன் கம்பனி
பட்டயக்கணக்காளர்கள்

NO.48-3B 1/1, DHARMARAMA ROAD, COL - 06.
TEL: 011 250 6194, 011 259 8326
FAX: 011 250 6194
E-MAIL: variam@sltnet.lk

V.ARIARATNAM *F.C.A, FSCMA*
S.RAVEENDRANATHAN *F.C.A*
MANAGEMENT CONSULTANT:
A.JEYAMOHAN *ACMA,CGMA*

BRANCH :
NO: 245, KASTHURIAR ROAD, JAFFNA.
TEL: 021 222 5372
EMAIL: ariamjaffna@gmail.com

# V. ARIARATNAM & CO

CHARTERED ACCOUNTANTS


தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திருப்பணிச் சபை

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச்செலவு கணக்கு

| | | |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| திருப்பணி நிதி வரவு | 6,506,420.00 | |
| உண்டியல் வரவு | 2,159,450.00 | |
| இலங்கை வங்கி வட்டி | 131,348.41 | |
| செலான் வங்கி வட்டி | 2,219.98 | |
| கொமர்சல்வங்கி வட்டி | 25,583.82 | |
| மக்கள்வங்கி வட்டி | 2,059.48 | 8,827,081.69 |
| **செலவுகள்** | | |
| தேர்முட்டி கட்டுமான செலவு | 5,178,100.00 | |
| பராமரிப்பு செலவு | 552,207.00 | |
| தேநீர் சிற்றுண்டிச்செலவு | 112,985.00 | |
| மாணவர்களிற்கான உதவுதொகை | 197,000.00 | |
| திருப்பணி வேலைக்கான செலவு | 864,502.00 | |
| திருப்பணி ஊழியர்சம்பளம் | 209,000.00 | |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் | 202,800.00 | |
| நிர்வாகச்செலவுகள் | 517,922.00 | |
| காகிதாதி செலவு | 4,515.00 | |
| போக்குவரத்து செலவு | 10,000.00 | |
| வாகன கூலி | 10,650.00 | |
| தொலைபேசிக் கட்டணம் | 38,600.00 | |
| மின்கட்டணம் | 72,050.00 | |
| தேர் தரிப்பிட வேலை | 54,880.00 | |
| கோபுர வேலை | 57,385.00 | |
| தபாற்செலவு | 6,640.00 | |
| கண்காணிப்பு கமெரா | 63,020.00 | |
| வங்கிக்கட்டணம் | 14,117.92 | |
| அறநெறிப்பாடசாலை | 164,459.00 | |
| மயில் பரமரிப்பு செலவுகள் | 33,260.00 | |
| போட்டோபிரதிகள் செலவு | 7,185.00 | 8,371,277.92 |
| செலவிலும் கூடிய வருமானம் | | 455,803.77 |

செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு


NO.48-3B 1/1, DHARMARAMA ROAD, COL - 06.
TEL: 011 250 6194, 011 259 8326
FAX: 011 250 6194
E-MAIL: variam@sltnet.lk

V.ARIARATNAM *F.C.A, FSCMA*
S.RAVEENDRANATHAN *F.C.A*

MANAGEMENT CONSULTANT:
A.JEYAMOHAN *ACMA,CGMA*

BRANCH :
NO: 245, KASTHURIAR ROAD, JAFFNA.
TEL: 021 222 5372
EMAIL: ariamjaffna@gmail.com

**V. ARIARATNAM & CO** *CHARTERED ACCOUNTANTS*

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் திருப்பணிச்சபை

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| | | |
|---|---|---|
| **ஆரம்ப மீதிகள்** | | |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு-7345848 | 1,096,416.93 | |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு-72090184 | 199,181.94 | |
| செலான் வங்கி சேமிப்புக் கணக்கு - 0850--01308424-101 | 37,788.29 | |
| கொமர்சல் வங்கி சேமிப்புக் கணக்கு - 8108036333 | 469,505.12 | |
| கொமர்சல் வங்கி சேமிப்புக் கணக்கு - 8108036334 | 15,385.99 | |
| மக்கள்வங்கி சேமிப்புக் கணக்கு - 285200100018920 | 50,551.52 | |
| பவுண் இருப்பு | 377,880.50 | |
| காசுக்கையிருப்பு | 1,882,963.15 | 4,129,673.44 |
| **பெறுவனவுகள்** | | |
| திருப்பணி நிதி வரவு | 6,506,420.00 | |
| உண்டியல் வரவு | 2,159,450.00 | |
| கொமர்சல்வங்கி வட்டி | 25,583.82 | |
| மக்கள்வங்கி வட்டி | 2,059.48 | |
| செலான் வங்கி வட்டி | 2,219.98 | |
| இலங்கை வங்கி வட்டி | 131,348.41 | 8,827,081.69 |
| | | 12,956,755.13 |
| **கொடுப்பனவுகள்** | | |
| தேர்முட்டி கட்டுமான செலவு | 5,178,100.00 | |
| பராமரிப்பு செலவு | 552,207.00 | |
| தேநீர் சிற்றுண்டிச்செலவு | 112,985.00 | |
| மாணவர்களிற்கான உதவுதொகை | 197,000.00 | |
| திருப்பணி வேலைக்கான செலவு | 864,502.00 | |
| திருப்பணி ஊழியர்சம்பளம் | 209,000.00 | |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் | 202,800.00 | |
| நிர்வாகச்செலவுகள் | 517,922.00 | |
| காகிதாதி செலவு | 4,515.00 | |
| போக்குவரத்து செலவு | 10,000.00 | |
| வாகன கூலி | 10,650.00 | |
| தொலைபேசிக் கட்டணம் | 38,600.00 | |
| மின்கட்டணம் | 72,050.00 | |
| தேர் தரிப்பிட வேலை | 54,880.00 | |
| கோபுர வேலை | 57,385.00 | |
| தபாற்செலவு | 6,640.00 | |
| கண்காணிப்பு கமெரா | 63,020.00 | |
| வங்கிக்கட்டணம் | 14,117.92 | |
| அறநெறிப்பாடசாலை | 164,459.00 | |
| மயில் பரமரிப்பு செலவுகள் | 33,260.00 | |
| போட்டோபிரதிகள் செலவு | 7,185.00 | 8,371,277.92 |
| | | 4,585,477.21 |

செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு

**இறுதி மீதிகள்**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு-7345848 | 2,431,308.04 | |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு-72090184 | 213,327.46 | |
| செலான் வங்கி சேமிப்புக் கணக்கு - 0850-01308424-101 | 135,384.82 | |
| கொமர்சல் வங்கி சேமிப்புக் கணக்கு - 8108036333 | 568,509.12 | |
| கொமர்சல் வங்கி சேமிப்புக் கணக்கு - 8108036334 | 15,919.12 | |
| மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு - 285200100018920 | 82,611.00 | |
| பொருள் இருப்பு பவுண் | 377,880.50 | |
| காசுக்கையிருப்பு | 760,537.15 | 4,585,477.21 |

..........................................
செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு